19.3.2025

COS No. 6/2023

வா.சா.1 கௌதம் த/பெ. கோபிநாதன்

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா கடன் கொடுக்கும் போது நான் இந்த கிளையில் மேலாளராக பணியாற்றவில்லை. எனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட கடன் ஆவணங்கள் என் முன்னிலையில் ஏற்பட்டது அல்ல. 2ம் பிரதிவாதி என் முன்னிலையில் கடன் ஆவணங்களில் கையொப்பம் செய்தார் என்று என்னால் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எங்களது வங்கி வாடிக்கையாளர் என்றால் சரிதான். அவரது வங்கி கணக்கு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தவிர வேறு கடன் மற்றும் ஆவணங்கள் எங்களது வங்கிக்கு கொடுத்துள்ளாரா என்றால் பார்த்தால் தான் சொல்ல முடியும். 2ம் பிரதிவாதி எங்களது வங்கியில் கடன் எதுவும் வாங்கவில்லை என்றால் பார்த்தால் தான் சொல்ல முடியும். 2ம் பிரதிவாதியின் அடையாளஆவணங்கள் எதுவும் தாக்கல்செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2ம்பிரதிவாதியின் வங்கி கணக்கு எண் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதியின் புகைப்படம் கடன் ஆவணங்களில் ஒட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தில் 2ம் பிரதிவாதியின் பெயர் மற்றும் விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த ஆவணத்தில் 2வதாக உள்ள கையொப்பம் 2ம் பிரதிவாதியுடையது. வா.சா.ஆ.7 ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் யார் கையொப்பம் செய்துள்ளார் என்ற விவரம் உள்ளதா என்றால் எங்களது வங்கி ஊழியர் கையொப்பம் செய்துள்ளார். அவருடைய விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவரது பணி அடையாள எண் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் என்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை. 2ம் பிரதிவாதி எங்களது வங்கி வாடிக்கையாளர் என்பதால் வங்கிக்கு முன்பே கொடுத்திருந்த ஆவணங்களில் உள்ள கையொப்பத்தை பார்த்து வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்களை நாங்கள் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்களில் உள்ள 2ம் பிரதிவாதியின் கையொப்பம் அவருடையது அல்ல என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் உறவினர்களா அல்லது நண்பர்களா என்று தெரியுமா என்றால் தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் முதல் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதி ஆகியோர் ஒரே ஊரை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி எங்களது வங்கியில் கடன் பெறவோ அல்ல ஜாமீன்தாரராகவோ இருக்க எங்களது வங்கியிடம் எந்த கையொப்பமும் செய்ததில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு எங்களது வங்கி அனுப்பிய அறிவிப்பு சார்வு ஆகவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கானது 2ம் பிரதிவாதியை பொறுத்து தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு இயந்திரங்கள் வாங்குவதற்கு கடன் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.1ம் பிரதிவாதியிடம் அந்த இயந்திரங்கள் இருக்கிறதா என்றால் பார்த்தால் தான் சொல்ல முடியும்.

மறு விசாரணை இல்லை.

Sd/- G.Gowtham

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.